# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 130/ந/2024
நாள்: 09.01.2025

திரு. S. சிவஞானம்,
பழனி, திண்டுக்கல் மாவட்டம் . . . முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர், . . . எதிர்மனுதாரர்
பழனி நகராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி, R.F. ரோடு, CRMK Building, எண். 153 என்ற முகவரியை சேர்ந்த திரு. S. சிவஞானம் என்பவரது 28.03.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.04.2024அன்று பெறப்பட்டு, 130/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழனி, R.F. ரோடு, CRMK Building, எண். 153 என்ற முகவரியை சேர்ந்த திரு. S. சிவஞானம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவம் அவர்களிடம் வேண்டுவது யாதெனில்

1) பழனி நகராட்சி T.S.No.9/44 பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டு சர்வ சுதந்திரமாக அனுபவிக்க முடியாமல் பாதையின் அகலம் குறைந்து வருவதை அகற்றவும் கட்டிட விதிகளை மீறி T.S.No.9/26ல் வீடு கட்டியுள்ள கட்டிடத்தின் உரிமத்தை ரத்து செய்தும்.

2) பாதை ஆக்கிரமிப்பு செய்த நபர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்க காவல் துறை வருவாய் துறைக்கு அறிக்கை தாக்கல் செய்யவும்.

3) இம்முறையீட்டு மனுதாரருக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொது ஆவணங்கள் நகல்கள் வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கும் படி வேண்டுகிறேன்.

4) பழனி நகரம் வார்டு எண்.4 பிளாக் எண்.26 T.S.No.23/19/27 களில் கட்டிட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு விரோதமாக வணிகவளாகங்கள் கட்டப்பட்ட கட்டிட உரிமையாளர் மீதும் மற்றும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகளின் படி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுகிறேன்.

5) எதிர்மனுதாரர்க்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முறைமன்ற நடுவர் உயர் அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்ய வேண்டியும்.

6) இன்னும் பிற தக்கதென கருதும் இதர பரிகாரங்களையும் முறையீட்டு மனுதாரர்க்கு வழங்கி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பணிவுடன் பிராத்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பழனி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) பழனிநகராட்சி ஆணையர் தனது 03.10.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-**

"பழனி நகரம் வார்டு 4 பிளாக் 26, நகரளவு எண்.9/44 & 9/25 நடைபாதையில் இருந்த செங்கல் மற்றும் மண் அகற்றம் செய்யப்பட்டன. மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் (ந.அ.எண்.9/103, 104) கட்டிடம் கட்டுவதற்கு 12.07.2023-ல் இணையதளம் (Single Window Portal) வாயிலாக கட்டிட விண்ணப்பம் வரப்பெற்ற பின் அதனை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டு திருமதி. ர. கமலேஸ்வரி என்பவர் பெயரில் உ.ஆணை எண.55/2023 நாள் 18.07.2023-ன்படி கட்டட அனுமதி உத்திரவு வழங்கப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்ட புகாரின் அடிப்படையில் ந.அ.எண்.9/103, 104 நிலம் நகர்சார் ஆய்வர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் மூலம் அளவீடு செய்யப்பட்டதில் எதிர்மனுதாரர் திருமதி. கமலேஸ்வரி பத்திர ஆவணத்தின்படி கட்டடம் கட்டப்பட்டுள்ளதாகவும் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என நகர் சார் ஆய்வாளர் 16.09.2024ம் தேதியன்று குறிப்பு பெறப்பட்டுள்ளது. அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு வருவது ஆய்வு செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் அமைப்புகள் சட்டம் 1998 (திருத்திய சட்டம்) 2022-ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டு கட்டட பணி உடனடியாக நிறுத்தப்பட்டது.

மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் கட்டடம் கட்டி வரும் உரிமையாளர் திருமதி. ர.கமலேஸ்வரி கட்டட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் அறிவிப்பினை ஏற்று அவ்வறிவிப்பிற்கு அனுமதியை விட கூடுதலாக கட்டிடம் கட்டியுள்ளதாகவும் இது சம்மந்தமாக அரசிற்கு மேல் முறையீடு செய்துள்ளதாகவும் 24.09.2024 ஆம் தேதியன்று அரசிற்கு பதிவு தபால் மூலம் மேல் முறையீடு செய்துள்ளதாக கூறி பதிவு தபால் ஒப்புகை ரசீது இணைத்து அரசிடமிருந்து மறு உத்திரவு வரும் வரை எனது கட்டடத்தின் மேல் நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் என நகராட்சிக்கு விண்ணபப்க் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேற்படி இடத்தில் கட்டப்படும் கட்டடம் தொடர்பாக தனக்கு தன்னிலை விளக்கம் அளிக்க கோரியதற்கு கட்டம் தொடர்பான உரிய விளக்கங்கள் மனுதாரராகிய திரு. எஸ்.சிவஞானம் அவர்களுக்கு நேரில் வழங்கப்பட்டு விட்டது.

மேலும் மனுதாரரல் குறிப்பிட்டுள்ள நகரளவு எண்.2,3/1,9/27ல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் 2014ம் ஆண்டு கட்டப்பட்டது. அனுமதியின்றி கட்டப்பட்டு வந்த அக்கட்டடத்தின் மீது தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம்,1920 – 199 r/w 317 (a)-ன் படி அ.க.எண்.41/2013,

42/2013 நாள் 14.07.2014–ல் அறிவிப்பு வழங்கப்பட்டு உரிமையாளர் மீது நீதிமன்றத்தில் STC No.435/2015 மற்றும் 436/2015ல் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் 26.03.2015ல் அபராதம் விதிக்கப்பட்டு அபராத தொகை உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் பழனிநகராட்சி ஆணையரும் 13.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.11.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5) மனுதாரர் திரு. S. சிவஞானம் என்பவர் 13.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.**

"எனது தரப்பாக written statement தாக்கல் செய்துள்ளேன். பழனி நகரம், வார்டு எண்.4, பிளாக் எண்.26, T.S.No.2,3/1, 9/27–களில் சட்ட விரோதமான கட்டிடம் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்து, lock & seal செய்யும்படியும் மற்றும் மேற்படி உரிமையாளர் pathway –யில் அமைத்துள்ள தகர கூரைகளை அகற்றம் செய்து பாதையாக அமைத்துக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். T.S.No.9/44, பாதைகளில் உரிமை ரத்து செய்து கொடுக்கும்படியும், கமலேஸ்வரி கட்டிட உரிமை ரத்து செய்து கொடுக்கும்படியும் வேண்டுகிறேன். நகர ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களிடம் நான் அளித்த புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.28.03.2024 அன்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களிடம் சமர்ப்பித்த புகார் மனுவினை எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) எதிர்மனுதாரரான பழனி நகராட்சி ஆணையரின் சார்பாக, நகரமைப்பு ஆய்வாளராகப் பணிபுரியும் சு. ஜெயந்திரேவேல் என்பவர் 13.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-**

"பழனி நகரம் வார்டு எண்.4, பிளாக் எண்.26, T.S.No.2,3/1, 9/27- கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு கட்டிட உரிமையாளர் திரு.மோகன் என்பவரால் 26.03.2015 அன்று பழனி நீதிமன்றத்தில் அபராத தொகை செலுத்தப்பட்டது. மேலும் மனுதாரரின் புகார் அடிப்படையில் கட்டடத்தின் மீது தொடர் நடவடிக்கை நகராட்சி சட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டு தோராயமாக இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்படும். T.S.No.9/44–ல் திருமதி கமலேஸ்வரி அவர்களால் ஆக்கிரமிப்பு கட்டடம் கட்டுவதாக தெரிவித்து உள்ளது தொடர்பாக நகர சார் ஆய்வரின் விரிவான அறிக்கை பெற்று ஆக்கிரமிப்பு இருப்பின் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் பழனி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை மற்றும் பழனி நகராட்சி ஆணையரின் சார்பாக ஆஜரான நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

மனுதாரரால் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள நகரளவு எண்.2, 3/1, 9/27ல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் 2014ம் ஆண்டு அனுமதியின்றி கட்டப்பட்டதால் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920–199 r/w 317 (a)-ன் படி அ.க.எண்.41/2013, 42/2013 நாள் 14.07.2014–ல் அறிவிப்பு வழங்கப்பட்டு உரிமையாளர் மீது நீதிமன்றத்தில் STC No.435/2015 மற்றும் 436/2015ல் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் 26.03.2015ல் அபராதம் விதிக்கப்பட்டு

அபராத தொகை உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது எனவும், மேலும் தொடர் நடவடிக்கை நகராட்சி சட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை ஏற்று, நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்க பழனி நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் மனுதாரர் தனது மனுவில், பழனி நகரம் வார்டு எண்.9/44, 9/25–ல் திருமதி.J.கமலேஸ்வரி என்பவர் அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டி வருகிறார் என்று புகார் அளித்திருப்பது தொடர்பாக 24.09.2024 ஆம் தேதியன்று அரசிற்கு பதிவு தபால் மூலம் திருமதி. J.கமலேஸ்வரி மேல் முறையீடு செய்துள்ளதாக கூறி பதிவு தபால் ஒப்புகை ரசீது இணைத்து அரசிடமிருந்து மறு உத்திரவு வரும் வரை தனது கட்டடத்தின் மேல் நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் என நகராட்சிக்கு விண்ணப்பம் அளித்துள்ளதை நகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.மேலும் நகராட்சி ஆணையர்13.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் T.S.No.9/44–ல் கமலேஸ்வரி அவர்களால் ஆக்கிரமிப்பு கட்டிடம் கட்டுவதாக தெரிவித்து உள்ளதாக குறிப்பிட்டு, அவ்விடத்திற்கான நகர சார் ஆய்வரின் விரிவான அறிக்கை பெற்று ஆக்கிரமிப்பு இருப்பின் அதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், மாண்புமிகு உயர்நீதிமன்ற W.P.No.1028/2024 நாளிட்ட ஆணையில்,

“In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அஃதாவது, சட்டத்தில் மனுதாரருக்கு பரிகாரம் குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவ சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்தி அலுவலர்களுக்கு ஆணை பிறப்பிப்பது, சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பரிகாரம் மற்றும் தனிநபர் உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதாக அமையும்) . எனவே, இந்நேர்வில் அரசுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளதால், இப்புகார் குறித்து இம்முறைமன்றத்தில் தீர்க்கப்படவேண்டியது ஏதுமில்லை என்று முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2025–ஆம் ஆண்டு, சனவரி 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S. சிவஞானம்,
எண். 153, CRMK Building,
R.F. ரோடு, பழனி,
திண்டுக்கல் மாவட்டம்.

2) ஆணையாளர்,
பழனி நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)